உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 15.08.2026 • மலர் 04 • இதழ்: 227 • சனி • Edition : Nagercoil • 15.08.2026 • Vol : 04 • Issue : 227 • Page : 4 • Rs. 5/-

## 80வது சுதந்திர தினம் கொண்டாட்டம்

# கோட்டையில் முதல்முறையாக கொடியேற்றுகிறார் முதல்வர் விஜய்



சென்னை: நாட்டின் 80வது சுதந்திர தினத்தையொட்டி, சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதல்வர் விஜய் நாளை முதல்முறையாக தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றுகிறார். தகைசால் தமிழர், அப்துல் கலாம், கல்பனாசாவ்லா உட்பட பல்வேறு விருதுகளையும் வழங்குகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற தவெக, கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது. அக்கட்சியின் தலைவர் விஜய், முதல்வராக கடந்த மே 10ம் தேதி பதவியேற்றார்.

இந்நிலையில், நாட்டின் 80வது சுதந்திர தினம் (ஆக.15) கொண்டாடப்படுகிறது. தலைநகர் டெல்லியில் பிரதமர் மோடி தேசியக் கொடியை ஏற்றி வைக்கிறார்.

அதேபோல, தமிழகத்தின் தலைநகர் சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதல்வர் விஜய் தேசியக் கொடியை முதல்முறையாக ஏற்றிவைத்து உரையாற்றுவதுடன், பல்வேறு விருதுகளையும் வழங்குகிறார்.

முன்னதாக, காலை 8.30மணிக்குகோட்டை கொத்தளம் பகுதிக்கு வரும் முதல்வர் விஜய்யை தலைமைச் செயலர் சாய்குமார் வரவேற்று, காவல் துறை அதிகாரிகளை அறிமுகம் செய்து வைப்பார்.

பிறகு, காவல் துறையின் பல்வேறு பிரிவினர் அளிக்கும் அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிடும் முதல்வர், 8.45மணிக்குகோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்துகிறார்.

தொடர்ந்து நடைபெறும் விழாவில், தகைசால் தமிழர் விருது, அப்துல் கலாம் விருது, துணிவு மற்றும் சாகசத்துக்கான கல்பனா சாவ்லா விருது, முதல்வரின் நல்ஆளுமை விருது, மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய மருத்துவர், நிறுவனம், சமூக சேவகர், கூட்டுறவு வங்கிக்கான விருதுகள், சமூகநல சேவைக்கான விருது, சிறந்த மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றுக்கான விருதுகளையும் முதல்வர் வழங்குகிறார்.

நீதிபதிகள், அமைச்சர்கள், முக்கிய விருந்தினர்கள் நிகழ்ச்சியைக்காண, கோட்டை கொத்தளம் எதிரே 3 மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

5 அடுக்கு பாதுகாப்பு

விழா நடைபெறும் ஜார்ஜ் கோட்டையைச் சுற்றி 5 அடுக்கு பாதுகாப்பு வளையம் அமைக்கப்படுகிறது. சென்னைவிமானநிலையத்துக்கு 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்ட்ரல், எழும்பூர் உள்ளிட்ட அனைத்து ரயில், மெட்ரோ ரயில் நிலையங்கள், வணிக வளாகங்கள், கடற்கரைப் பகுதிகள், வழிபாட்டுத் தலங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் முக்கிய இடங்களில் தீவிர சோதனை மற்றும் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விடுதிகள், ஓட்டல்களில் போலீஸார் சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை பெருநகர காவல் எல்லை முழுவதும் நான்கு சக்கர மற்றும் இருசக்கர ரோந்து வாகனங்கள் மூலம் போலீஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். முக்கிய சாலைகளில் தடுப்புகள் அமைத்து, வாகனத் தணிக்கையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்குரிய நபர்கள், ஆதரவின்றி நிற்கும் வாகனங்கள் குறித்து தகவல் கிடைத்தால் உடனே போலீஸாருக்கு தெரிவிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னையில் சுமார் 10 ஆயிரம் போலீஸார் உட்பட தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸார் பாதுகாப்பு, கண்காணிப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

## முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் கலெக்டர் தலைமையில் ஆலோசனை கூட்டம்



நாகர்கோவில், ஆக.15

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் நடத்துவது தொடர்பான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு, துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

தமிழ்நாடு அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், 2026 2027ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான 'தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை' விளையாட்டுப் போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ளவதற்கான ஆன்லைன் பதிவுகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவமாணவியர்கள், கல்லூரி மாணவமாணவியர்கள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் என ஐந்து பிரிவுகளின் கீழ் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. காவல் துறையில் பணிபுரியும் அனைத்து விளையாட்டு வீரர்களும் முதலமைச்சர் கோப்பையில் பங்கேற்றிட வேண்டும். கிராம மற்றும் நகர பஞ்சாயத்துக்களில் உள்ள கிராம, விளையாட்டு வீரர்களுக்கு ஆன்லைனில் பதிவு செய்வது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர் நிலை, மேல்நிலை, தனியார் பள்ளிகளுக்கும் இப்போட்டிகள் தொடர்பான விபரங்கள் தெரிவித்திட வேண்டும்.

அனைத்து விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளும் தங்கள் பதிவினை இணையதளத்தில் பதிவு செய்தால் மட்டுமே போட்டியில் கலந்துக்கொள்ள முடியும். போட்டியில் கலந்துக் கொள்ள இருப்பவர்கள் தங்களுக்கு வங்கி கணக்கு இல்லை என்றால் உடனடியாக வங்கிக் கணக்கு திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் போட்டிகள் தொடர்பான தகவல்களை தெரிவித்திட மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலருக்கு அறிவுறுத்தபட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கென்று போட்டிகள் தனியாக நடத்தப்படுவதால் மாவட்ட விளையாட்டுத்துறையுடன் இணைந்து போட்டிகளை சிறப்பாக நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. 1,000 க்கும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் கலந்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட விளையாட்டு அலுவலர் வினு, விளையாட்டு ஆணைய உறுப்பினர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



கிருஷ்ணகிரிமாவட்டம்கிருஷ்ணகிரிஅரசுஆடவர்கலைக்கல்லூரிமைதானத்தில்நடைபெற்ற 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியின் நிறைவு விழாவில் மாங்கனி கண்காட்சியில் அமைக்கப்பட்டு இருந்த அரங்குகளில் சிறந்த அரங்குகள் அமைத்தஅரசுஅலுவலர்களுக்கும்ஊழியர்களுக்கும்மாவட்டஆட்சித்தலைவர்திரு.தினேஷ்குமார் இ.ஆ.ப. அவர்கள் கேடயங்களையும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்வில் அரசு அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## சுதந்திர தின சிறப்புப் பதக்கங்கள் பெறும் காவல் அதிகாரிகள் பட்டியல்: தமிழக அரசு வெளியீடு

சென்னை: 2026ம் ஆண்டு சுதந்திரதினத்தை முன்னிட்டு சிறப்புப் பதக்கங்கள் பெற உள்ள 15 காவல்துறை அதிகாரிகள் / சார்நிலை அலுவலர்கள் குறித்த பட்டியலை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புலன் விசாரணைப் பணியில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ்கண்ட 10 காவல்துறை அதிகாரிகள் / சார்நிலை அலுவலர்களுக்கு 2026ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வரின்காவல்புலன்விசாரணைக்கானசிறப்புப்பணிப் பதக்கங்கள் வழங்க தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்:

1. சி.ஜெயஸ்ரீ, காவல் துணை கண்காணிப்பாளர், கும்மிடிபூண்டி உட்கோட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
2. நா.தமிழரசி, காவல் துணை கண்காணிப்பாளர், திருவள்ளூர் உட்கோட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
3. கொ.அழகுராஜ், காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் காவல் நிலையம், கோவை மாநகரம்.
4. ந.தனுசியா, காவல் துணை கண்காணிப்பாளர், ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை, திருச்சி மாநகரம்.
5. சே.லதா, காவல் ஆய்வாளர், தனி சிறுவர் காவல் உதவி பிரிவு, கோவை மாநகரம். த.பி.பா.
6. வி.கோமதி காவல்துறை உதவி தலைவர், நிர்வாகம், காவல்துறைதலைமை இயக்குநர்அலுவலகம், சென்னை.

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப் பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய்ரொக்கப்வெகுமதியும்வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், தமிழக முதல்வரால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஈரோட்டில் காங்கிரஸ் சார்பில் சத்யாகிரக போராட்டம்

ஈரோடு ஆகஸ்ட் 15

ஈரோட்டில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை சாதி ரீதியாக அவமதித்ததாகக் கூறப்படும் ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவினரின் கருத்துகளை கண்டித்து சத்யாகிரக போராட்டம் நடைபெற்றது.

கருங்கல்பாளையம் காந்தி சிலை முன்பு நடைபெற்ற போராட்டத்தில், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா. ராஜேஷ்ராஜப்பா, மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவுதலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி 1வது மண்டல தலைவர் மாமரத்துப்பாளையம் எஸ். கோபி உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சுதந்திர தினம் முன்னிட்டு கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலைக்கு துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு



கன்னியாகுமரி, ஆக.15

சுதந்திர தின விழாவை முன்னிட்டு கன்னியாகுமரிதிருவள்ளுவர்சிலைக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதையொட்டி அசம்பாவிதம் எதுவும் நடைபெறாமல் தடுக்க நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி குமரி மாவட்டத்திலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

குறிப்பாக சர்வதேச சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் போலீஸ் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது கடலில் அமைந்துள்ள 133 அடி உயர திருவள்ளுவர் சிலைக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் கன்னியாகுமரி கடலோர பாதுகாப்பு குழும போலீசார் நவீன ரோந்து படகுகளில் கடல் வழி பாதுகாப்பை தீவிரப்படுத்தியுள்ளனர். சந்தேகப்படும்படியான நபர்கள் யாரும் தங்கும் விடுதிகளில் தங்கிள்ளனரா?

எனபோலீசார்விடுதிகளில்சோதனை நடத்தி வருகின்றனர்.

இதுதவிர கன்னியாகுமரி பகவதியம்மன் கோவில், காந்தி மண்டபம், காமராஜர் மணி மண்டபம், கலங்கரை விளக்கம், ரயில் நிலையம் உள்பட அனைத்து இடங்களிலும் போலீஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் கன்னியாகுமரி டி.எஸ்.பி.பிரகாஷ் தலைமையில் போலீசார் பாதுகாப்புபணியில்ஈடுபட்டுள்ளனர்.

கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள கடலோர மீனவ கிராமங்களை கடலோர பாதுகாப்பு குழும போலீசார் கண்காணித்து வருகின்றனர்.

## கன்னியாகுமரியில் மாணவ,மாணவியரின் படகோட்ட பயணம்



கன்னியாகுமரி, ஆக.15

கன்னியாகுமரி சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் கடல் படகோட்டப் பயணம் 2026 நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில் கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, மாவட்டங்களை சார்ந்த மாணவ, மாணவியர் 14 பேர் இந்திய கடற்படைக்கு சொந்தமான இரு படகுகளில் சின்னமுட்டம் மீன்பிடித்துறைமுகம் முதல் கூடன்குளம் வரை சென்றார்கள். இந்நிகழ்ச்சியை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபருக்கான தேசிய மாணவர் படை துணை இயக்குநர் ஜெனரல் கமேண்டர் நம்பியாத் சுதிப் கொடியசைத்து துவங்கி வைத்தார். லெப்டினல் கர்ணல் சுஜீத் எஸ் உன்னி, கர்ணல் சவ்கான், கேப்டன் டேவிட்இளங்கோவன், கன்னியாகுமரி கடலோர பிரிவு காவல் ஆய்வாளர் சாந்தி, ஆய்வாளர் பத்ரகாளி, சின்னமுட்டம் மீன்வளத்துறை ஆய்வாளர் விபின் மற்றும் விவேகானந்த கல்லூரி, நூரில் இஸ்லாம் கல்லூரி, ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி, புனித அந்தோணியர் பள்ளி, இந்து கல்லூரி மாணவ, மாணவியர் 80 பேர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் – 2026



தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் 13.08.2026 அன்று, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் – 2026 நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டம் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், மாவட்ட அளவில் நடைபெறவுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள், போட்டி நடத்தும் முறைகள், பங்கேற்பாளர்களுக்கான வசதிகள் மற்றும் போட்டிகளை ஒருங்கிணைப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. மேலும், விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்கும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு. ராஜகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும்சம்பந்தப்பட்டதுறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

# சிந்தலக்கரை வெட்காளியம்மன் கோவிலில் காளிபராசக்திக்கு ஆடிப்பூர வளைகாப்பு விழா

விளாத்திகுளம் ஆகஸ்ட் 15. தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரம் அருகே உள்ள சிந்தலக்கரை ஸ்ரீ வெட்காளியம்மன் கோவில் காளிபராசக்தி பீடத்தில் ஆடிபுரத்தை முன்னிட்டு காளிபராசக்திக்கு அதிகாலை 4 மணி அளவில் மஞ்சள்,இளநீர்,பால்.சந்தனம்,தேன் உள்ளிட்ட பல்வேறு பொருட்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது,அதனைத்தொடர்ந்து வேப்பிலை அலங்காரத்தில் பக்தர்களுக்கு காளிபராசக்தி காட்சியளித்தார், பின்னர் காலை 7:20 மணி அளவில் வண்ண மலர்களால் மாலை அணிவிக்கப்பட்ட காளிபராசக்திக்கு பல்வேறு வகையான வண்ண வளையல்களால் மாலை அணிவிக்கப்பட்டு அலங்கார தீபாதாரணை காண்பிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து வெட்காளியம்மனுக்கு 50 ரூபாய் மாலை,எலுமிச்சை மாலை,மலர் மாலை அணிவிக்கப்பட்டுசிறப்புதீபாதாரனை நடைபெற்றது. ஆடிப்பூரத்தை முன்னிட்டு ஸ்ரீ வெட்காளியம்மன் கோவில் வளாகத்தில் குழந்தை இல்லாத தம்பதியினர் வெக்காளியம்மன் முன்பு அமர்ந்து வளையல்,சந்தனம்,குங்குமம்,இனிப்பு பலகாரம் ஆகியவற்றை வைத்து பரிகாரபூஜை நடத்தினர். ஆடிப்பூரம் மற்றும் ஆடி கடைசி வெள்ளி என்பதால் தமிழகம் முழுவதும் இருந்து சுமார் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சிந்தலக்கரை வெட்காளியம்மன் கோவிலுக்கு வந்து சிறப்பு வழிபாடு நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



# ஈரோடு ஜவுளித்துறைக்கு புதிய தொழில்நுட்ப வாய்ப்பு



ஈரோடு, ஆக.14 ஜவுளி உற்பத்தி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உலகளாவிய போட்டித் தன்மையை மேம்படுத்தும் நோக்கில், இந்திய ஐடிஎம்இ சொசைட்டி சார்பில் 'இந்தியா ஐடிஎம்இ 2026' சர்வதேச ஜவுளி இயந்திரக் கண்காட்சி உத்தரபிரதேச மாநிலம் நொய்டாவில் டிசம்பர் 4ம் தேதி முதல் 9ம் தேதி வரை 6 நாட்கள் நடைபெறுகிறது. இந்தக் கண்காட்சியில் 95 நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் 1,800க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் பங்கேற்க உள்ளனர். இதுதொடர்பான அறிமுக நிகழ்ச்சி ஈரோடு டெக்ஸ்டைல் மாலில் நடைபெற்றது.

இந்தியா ஜவுளி மற்றும் ஜவுளிப் பொறியியல் துறையில் உலகளாவிய மையமாக உருவெடுப்பதை வலுப்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நார், நூல், துணி வகைகள் முதல் தயாரிக்கப்பட்ட ஆடைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் வரை, ஜவுளித்துறையின் பல்வேறு

பிரிவுகளில் உருவாகியுள்ள நவீன இயந்திரங்கள்மற்றும்புதியதொழில்நுட்பங்கள் இதில் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

மிகப்பெரிய கண்காட்சி இந்திய ஐடிஎம்இ சொசைட்டி நடத்தும் 12வது கண்காட்சியான இது, சுமார் 2 லட்சத்து 40 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் 18 அரங்குகளில் நடைபெற உள்ளது. 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்காட்சியை பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 'மேக் இன் இந்தியா', 'தற்சார்பு இந்தியா', 'பிஎம் மித்ரா பார்க்ஸ்' மற்றும் 'தேசிய தொழில்நுட்ப ஜவுளித் திட்டம்' உள்ளிட்ட மத்திய அரசின் முக்கியத் திட்டங்களுடன் இந்தக் கண்காட்சி இணைந்து செயல்படுகிறது.

புதிய தொழில்நுட்பங்களுக்கு முக்கியத்துவம்

ITME NEXT கருப்பொருளில் நடைபெறும் இக் கண்காட்சியில்செயற்கை நுண்ணறிவு, ஆட்டோமேஷன், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் இண்டஸ்ட்ரி 4.0' உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள் இடம்பெற உள்ளன. சுற்றுச் சூழலுக்கு உகந்த உற்பத்தி, வளங்களை திறம்பட பயன் படுத்துதல் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் தொழில் நுட்பத் தீர்வுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. மேலும், கருத்தரங்குகள், குழு விவாதங்கள் மற்றும் துறைசார் வல்லுநர்களின் கலந்துரையாடல்கள் நடைபெற உள்ளன. 'Textile Horizons 2026' என்ற சர்வதேச தொழில்நுட்ப மாநாட்டில் ஜவுளி உற்பத்தியின் எதிர்காலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புதிய கண்டு பிடிப்புகள்,

ஆட்டோமேஷன் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் குறித்து உலகளாவிய நிபுணர்கன் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்நுட்பத் தலைவர்கள் விவாதிக்க உள்ளனர்.

இந்தக் கண்காட்சி மூலம் இந்திய ஜவுளி உற்பத்தியாளர்கள் சர்வதேச சந்தைகள் மற்றும் புதிய வர்த்தகக் கூட்டாளர் களுடன் இணையும் வாய்ப்பு ஏற்படும். புதிய வாடிக்கையாளர் களைப் பெறுதல், புதிய சந்தைகளை அறிதல், எதிர்கால தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளுதல் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் உள்ளிட்ட பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கும்.

ஈரோடு உள்ளிட்ட தமிழகத்தின் முக்கிய ஜவுளி உற்பத்தி மையங்களைச் சேர்ந்த தொழில்துறையினர் இந்தக் கண்காட்சியில் பங்கேற்று. நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டு, தங்களது உற்பத்தித் திறன் மற்றும் உலகளாவிய போட்டித் தன்மையை மேம்படுத்திக் கொள்ளலாம் என ஏற் பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



# கூட்டுறவு வங்கிகளில் பயிர் கடன் முழுமையாக தள்ளுபடி: ஈரோட்டில் அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

ஈரோடு ஆகஸ்ட் 15 கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதாக உறுதி அளித்துவிட்டு, தற்போது பல்வேறு நிபந்தனைகளை விதித்து விவசாயிகளை ஏமாற்றும் செயலை கண்டித்தும், காவிரியில் தமிழ்நாட்டிற்குரிய பங்கு நீரை பெறத் தவறியதோடு கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டுவதைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காத போக்கைக் கண்டித்தும் அதிமுக சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. டெல்டா மாவட்ட விவசாயிகளின் வேதனைக்குப் பதில் சொல்லாமல் மக்கள் விரோதப் போக்கை அமல்படுத்தும் அரசைக் கண்டித்து, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்திருந்தார்.

அதன்படி, ஈரோடு மாவட்ட ஒருங்கிணைந்த அதிமுக சார்பில் ஈரோடு வீரப்பன்சத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கழக அமைப்புச் செயலாளரும், ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்டச் செயலாளருமான கே.சி.கருப்பண்ணன் தலைமை தாங்கினார்.

ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டச் செயலாளர் ஏ.கே.செல்வராஜ், ஈரோடு மாநகர் மாவட்டச் செயலாளர் பெரியார் நகர் மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் கே.எஸ். தென்னரசு, பொன்னுதுரை, முன்னாள் மேயர் மல்லிகா பரமசிவம், முன்னாள் துணை மேயர் கே.சி. பழனிச்சாமி, ஜெயலலிதா பேரவை மாவட்டச் செயலாளர் ஈகிள் சதீஷ்குமார், பொருளாளர் காவிரி செல்வம், எதிர்க்கட்சித் தலைவர் தங்கமுத்து, பகுதிச் செயலாளர் கோவிந்தராஜ், வட்டச் செயலாளர் காவேரி முருகன், மாணவரணி மாவட்ட விவசாயப் பிரிவு துணைச் செயலாளர் சிவக்குமார், மொடக்குறிச்சி தெற்கு ஒன்றிய வர்த்தக அணிச் செயலாளர் மோகன்குமார், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் மீன் ராஜா, தனியார் அண்ணா மின் அமைப்பு மாநிலத் தலைவர் மின் மணி, பேரவை இணைச் செயலாளர்கேபிள்ரமேஷ், கருங்கல்பாளையம் பகுதிச் செயலாளர் மார்க்கெட் வைரவேல் உட்படப் பல்வேறு முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தியும், அரசைக் கண்டித்தும் தீவிர முழக்கங்களை எழுப்பினர். மாவட்டம் முழுவதிலும் இருந்து வருகை தந்த ஆயிரக்கணக்கான அதிமுக தொண்டர்கள் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரளாகப் பங்கேற்றனர்.

# சேலம் மாவட்டத்தில் சுதந்திர தின விழா அழைப்பு

சேலம் ஆக 15 சேலம் மாவட்டத்தில் சுதந்திரதினவிழா சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் 15.08.2026 காலை சுமார் 8.00 மணி அளவில் நடைபெற உள்ளது. இந்த சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத் காலை 8.50 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல் துறை துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களை கௌரவித்து பல்வேறு துறைகள் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்க உள்ளார். பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் அதனை தொடர்ந்து பள்ளி கல்வித்துறையின் சார்பில் பெண்கள் விழிப்புணர்வு தேச பக்தி பாடல் உள்ளிட்ட மைய கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் சுமார் 650க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொள்ளும் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது. இந்த சுதந்திர தின விழா கொண்டாட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள், காவல் துறை உயர அலுவலர்கள், அரசுதுறை அலுவலர்கள், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்க உள்ளனர்.



# காப்புக்காட்டில் தொல்காப்பியர் அறக்கட்டளை கூட்டம்

புதுக்கடை, ஆக.15 தொல்காப்பியர் அறக்கட்டளை கூட்டம், காப்புக்காடு தொல்காப்பியர் சிலை வளாகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்திற்கு அறக்கட்டளைத் தலைவர் பாஸ்கரன் தலைமை வகித்தார். ஆசிரியை புஷ்பலதா தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். செயலாளர் பேராசிரியர் செ. சஜீவ் அனைவரையும் வரவேற்றார். பெற்றோர் ஆசிரியர் கழக மாநில துணைத் தலைவர் சிந்துகுமார் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் இரத்தினசாமி தங்கையயன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். புலவர் கு. இரவீந்திரன், பணி நிறை வணிக வரித் துறை ஆய்வாளர்கோவிந்தராஜ்,ஆசிரியைஷோபா, பி.எஸ்.என்.எல். பொறியாளர்மூர்த்தி,பிரான்சிஸ், ரெஜிகலா ஆகியோர் கருத்துரை வழங்கினர். பொருளாளர் ரெவிந்திரன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# கணபதிக்கல் சாலையை சீரமைக்க கோரிக்கை



மருதம்பாறை அருகே கணபதிகல் பகுதிக்கு செல்லும் சாலை பல வருடங்களாக உடைந்து, குண்டும் குழியாக மாறி மக்கள் பயணிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.சாலை முழுவதும் ஆங்காங்கே பள்ளமாகவும், விபத்து ஏற்படுத்தும் வகையில் ஜல்லி கற்கள் சிதறி கிடக்கிறது. மழைக்காலங்களில் இச்சாலையில் உள்ள பள்ளங்கள் நீச்சல் குளங்களாக காட்சி அளித்து வருகிறது. இச்சாலையில் தொடர் விபத்துகள் நிகழ்ந்து வருகிறது. பேரூராட்சியால் நிறுவப்பட்ட கான்கிரீட் சாலை சீராகவும், நெடுஞ்சாலை சாலை உடைந்து, சீரற்ற நிலையில் உள்ளது. செல்கிற வழி மலையும் மலை சார்ந்த இடமும் மற்றும் சிற்றாறு அணை பகுதியில் நீர் தேக்கமும் கண்ணுக்கு அருமையாகவும், உள்ளத்தை கவரும் விதமாகவும் செல்லும் சாலை எமனாகவும் உள்ளது. எனவே நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் உடனடியாக சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கும் படி ஊர் மக்கள் சார்பாகவும் சமூக ஆர்வலர்கள் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறோம்.

# நைஜீரியாவில் காமன்வெல்த் வாள்வீச்சு போட்டி குமரி மாற்றுதிறனாளி வீராங்கனைகள் 2 பேருக்கு தங்கம்




நாகர்கோவில், ஆக.15 நைஜீரியாவின் லாகோஸ் நகரில்நடைபெற்றுவரும் காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வீரர்–வீராங்கனைகள் சிறப்பாக விளையாடி 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என 4 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

காமன்வெல்த் வாள் வீச்சு சங்கம் மற்றும் நைஜீரியா வாள்வீச்சு சங்கம் சார்பில் நடைபெறும் இப்போட்டி லாகோஸ் நகரில் உள்ள எக்கோ அட்லாண்டிக், விக்டோரியா தீவு ரக்பி பள்ளி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்த சாம்பியன்ஷிப்பில் சீனியர், 23 வயதுக்குட்பட்டோர், மாஸ்டர்ஸ் மற்றும் வீல்சேர் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. எப்பி, பாயில், சாப்ரே ஆகிய மூன்று வகையான வாள்வீச்சு பிரிவுகளிலும் வீரர்கள் பங்கேற்கின்றனர். இந்த போட்டியில் இந்தியா சார்பில் மொத்தம் 67 வீரர்–வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த வீரர்களில், 23 வயதுக்குட்பட்டோர் மகளிர் சாப்ரே தனிநபர் பிரிவில் ஜெபர்லின் (21) தங்கப்பதக்கம் வென்றார்.

இதில் குமரி மாவட்டம் திங்கள் சந்தை பகுதியை சேர்ந்த மாற்று திறனாளி வீராங்கனை சிராந்தி தாமஸ் வீல்சேர் பிரிவில் இரு தங்க பதக்கம் வென்றார், இது போன்று தனி பிரிவில் ஆற்றூர் பகுதியை சேர்ந்த ஜிஷோ நிதி என்ற இளைஞர் ஒரு தங்க பதக்கம் மற்றும் ஒரு வெண்கலம் பதக்கம் வென்றார்.

அதேபோல், மகளிர் பாயில் தனிநபர் பிரிவில் ஜாய்ஸ் அக்ஷிதா (20) தங்கப்பதக்கம் கைப்பற்றினார். அதே பாயில் பிரிவில் தமிழகத்தைச் சேர்ந்த கனகலட்சுமி (20) வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் எப்பி தனிநபர் பிரிவில் அன்பிளஸ் காட்வின் (20) வெண்கலப்பதக்கம் வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். நைஜீரியாவில் நடைபெறும் இந்த காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன்ஷிப்பில் இந்திய வீரர்கள் தொடர்ந்து பதக்கங்களை குவித்து வருகின்றனர். இரண்டாவது நாளிலும் இந்திய அணி பல்வேறு பிரிவுகளில் பதக்கங்களை வென்றுள்ளது.

# குழித்துறை ரோட்டரி சங்கம் சார்பில் தாய்ப்பால் விழிப்புணர்வு நிகழ்ச்சி




மார்த்தாண்டம்,ஆக.15 குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக விழிப்புணர்வு நிகழ்ச்சியானது குழித்துறை ரோட்டரி சங்கமும், இடைக்கோடு, ஆரம்ப சுகாதார நிலையமும் இணைந்து இடைக்கோடில் வைத்து நடத்தியது.

நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் ஸ்ரீ நாகேஷ் தலைமை வதித்தார். செயலாளர் கிருஷ்ணதாஸ் அனைவரையும் வரவேற்றார். ரோட்டரி துணை ஆளுநர் ரகுபதி வாழ்த்துரை வழங்கினார். மருத்துவர்கள் ஜில்ஷா மற்றும் சிவசங்கரி ஆகியோர் தாய்ப்பால் ஊட்டுவதன் மகத்துவத்தை எடுத்துக் கூறினர். நிகழ்வில் 56 தாய்மார்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். ஜேக்கப் ஞானதாஸ் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். சங்க பொருளாளர் ராமசுப்ரமணியன் அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சியை கிறிஸ்து தாஸ், கேப்டன் ராஜேஷ் குமார், சஜீவ் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 80 அடி நீள தேசிய கொடி ஏந்தி பேரணி



மதுரை ஆகஸ்ட்:15 இந்தியா முழுவதும் ஆகஸ்ட் 15ஆம் தேதி சுதந்திரதின விழா கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தையொட்டி, ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில், நாளை (150825) 80வது சுதந்திர விழா கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் கொண்டாட்டங்கள் தொடங்கியுள்ளது.

அதன் ஒரு பகுதியாக மதுரை ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் மதுரை பாஜக நகர் பகுதி சார்பில் தேசிய கொடி பேரணி நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடியின் அறிவுறுத்தல் படி பாஜக நகர் மாவட்ட தலைவர் மாரி சக்கரவர்த்தி முன்னிலையில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் பகுதியில் தொடங்கி ஜீவாநகர் மூனு போஸ்ட் பகுதி வரை இந்த பேரணியானது நடைபெற்றது. இதில் 80 நீள தேசிய கொடி ஏந்தியப்படி நடந்து வந்தனர் . இதில் பாஜகவினர் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



# தருமபுரி மாவட்ட பாஜக சார்பில் தேசியக் கொடி ஏந்தி பேரணி

தருமபுரி ஆகஸ்ட் 15

தருமபுரி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் சுதந்திர தினத்தின் 80வது ஆண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு, நாடு முழுவதும் நடைபெற்று வரும் 'ஹர் கர் திரங்கா' இயக்கத்தின் ஒரு பகுதியாக தேசியக் கொடி ஏந்திய பேரணி மாவட்ட செயலாளர் சரவணன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஏராளமான பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு தேசப்பற்றை வெளிப்படுத்தினர். சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் 'ஹர்கர்திரங்கா' இயக்கத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இப்பேரணி தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து தொடங்கிய பேரணி, நேத்தாஜி பைபாஸ் சாலை, நான்கு ரோடு, பழைய பேருந்து நிலையம் உள்ளிட்ட முக்கிய சாலைகள் வழியாக சென்று பி. எஸ். என். எல். அலுவலகம் அருகே வந்து நிறைவடைந்தது. இந்த பேரணியில் நகர செயலாளர் சாய் ஆறுமுகம், பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் தேசியக் கொடியை ஏந்தியபடி கலந்து கொண்டனர். சுதந்திர தினத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையிலும், நாட்டின் மீதான தங்களது தேசப்பற்றை வெளிப்படுத்தும் வகையிலும் பேரணி நடைபெற்றது.

# கன்னியாகுமரியில் சுற்றுலா படகுகள் 4 மணி நேரம் தாமதமாக இயக்கம்

கன்னியாகுமரி,ஆக.15

பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்வார்கள். பின்னர்கடலில்அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை படகில் சென்று பார்த்து விட்டு திரும்புவது வழக்கம்.

இதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடைவேளையின்றி படகுகளை இயக்கி வருகிறது.நேற்று வழக்கம் போல் காலை 8 மணிக்கு தொடங்கவேண்டிய படகு போக்குவரத்து கடலில் அலை மற்றும் நீர் மட்டம் தாழ்வு காரணமாக தொடங்கவில்லை. பின்னர் நண்பகல் 12 மணியளவில் கடல் நீர் மட்டம் சகஜ நிலைக்கு திரும்பியதைத் தொடர்ந்து படகு சேவை 4 மணி நேரம் தாமதமாக தொடங்கியது.

அதனைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் உற்சாகமாக படகில் சென்று விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் கண்ணாடி இழை கூண்டு பாலம் வழியாக நடந்து சென்று திருவள்ளுவர் சிலையை பார்த்துவிட்டு திரும்பினர்.

# குழித்துறை வாவு பலி பொருட்காட்சி திடலில் உணவு பாதுகாப்பு துறையினர் ஆய்வு



சுசீந்திரம். ஆக.15

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவின் படி உணவு பாதுகாப்பு துறையின் மாவட்ட நியமன அலுவலர் டாக்டர் ஜெயராமபாண்டியன் வழிகாட்டுதலின்படி உணவு பாதுகாப்பு அலுவலர்கள் .சக்திமுருகன், ஜெஃப்ற்றி மோள் ஆகியோர் இணைந்து குழித்துறைவாவுபலிபொருட்காட்சிதிடலில்(13.8.26) அன்று உணவு பொருள் விற்பனை கடைகளை ஆய்வு செய்தனர். ஆய்வின்போது கடைகளில் தமிழ்நாடுஅரசால்தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகளை பறிமுதல் செய்து ,2 கடைகளுக்கு தலா ரூ.5000 வீதம் அபராதமும் விதிக்கப்பட்டது. 9 கடைகளுக்கு நோட்டிஸ் வழங்கப்பட்டது. மேலும் 20கிலோ செயற்கை நிறமிகள் சேர்க்கப்பட்ட காலிபிளவர், சுகாதாரமற்ற நிலையில் செய்த லட்டு,புளி கரைசல், பானிபூரி,கார சட்னி ஆகிய உணவு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது. விற்பனையாளர்களுக்கு செயற்கை நிறமிகளை உணவுப் பொருள் தயாரிப்பில் பயன்படுத்தக்கூடாது, செய்தித்தாள்களில் உணவு விற்பனை செய்ய கூடாது மற்றும் பிளாஸ்டிக் பைகளில் உணவு பொருட்கள் வழங்கக் கூடாது, தன் சுத்தம் முறையாக பேண வேண்டும் போன்ற விழிப்புணர்வு வழங்கப்பட்டது.உணவுகுறித்த புகார்களை9444042322 என்ற வாட்சப் எண்ணிலும் தெரிவிக்கலாம் என்று கன்னியாகுமரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

# திருப்பூரில் முதன்முறையாக சாப்ட்வேர் தொழில் நுட்பத்துடன் மண்டல அளவிலான சிலம்பப் போட்டி!

## செப்டம்பர் 13ந்தேதி நடக்கிறது!!



திருப்பூர், ஆக. 15

தமிழ்நாட்டின் பாரம்பரிய கலையான சிலம்பாட்டப் போட்டியை சர்வதேச அளவில் கொண்டு செல்லும் வகையில், முதன்முறையாக சாப்ட்வேர் தொழில் நுட்பம் மற்றும் நவீன பாதுகாப்பு உபகரணங்களுடன் மண்டல அளவிலான சிலம்பப் போட்டி திருப்பூரில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து தமிழ்நாட்டு உலக சிலம்ப சம்மேளனத்தின் மாநில செயலாளரும், டீம் ஷாடோகாய் மார்ஷல் ஆர்ட்ஸ் அகடமியின் இயக்குனருமான கௌதம் ரகுநாதன் கூறியதாவது:

தமிழ்நாட்டில் முதன்முறையாக உள் மண்டல அளவிலான சிலம்பப் போட்டி திருப்பூர் மாவட்டத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த போட்டியில் தொழில்நுட்ப முன்னேற்றமாக, சாப்ட்வேர் ஸ்கோரிங் சிஸ்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

மேலும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தலைக்கவசம் உடல்கவசம் மற்றும் சிலம்பக் குச்சிகளுக்கான பாதுகாப்பு உறை உள்ளிட்ட அனைத்து நவீன பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இந்த போட்டி வருகிற செப்டம்பர் மாதம் 13ந்தேதி திருப்பூர் எஸ்.கே.எல். பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. சப்ஜூனியர், கேடட் மற்றும் ஜூனியர் ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து திரளான மாணவமாணவிகள் கலந்து கொள்கின்றனர்.

நமது பாரம்பரிய சிலம்பக் கலையை உலக அளவில் கொண்டு சென்று, பிற நாட்டு மக்களும் கற்கும் வகையில் மேம்படுத்துவதே எங்களது நோக்கம் ஆகும். சிலம்பக் கலையை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்ல உதவும் இந்த முயற்சிக்கு தமிழ்நாடு அரசு உரிய ஆதரவு அளிக்க வேண்டும்.

# கிருஷ்ணகிரி பெரியம்மாரியம்மன் கோவிலில் 1008 புடவை அலங்காரம்

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம்

கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 15

ஆடி மாதத்தின் கடைசி வெள்ளியான(ஆகஸ்ட்14, 2026) அன்று தமிழகம் முழுவதும் உள்ள அம்மன் கோயில்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி சென்னை சாலையில் பிரசித்தி பெற்ற ஸ்ரீபெரிய மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் வாராவாரம் வெள்ளிக்கிழமை தோறும் அபிஷேகங்கள் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெறுவது வழக்கம். இந்தக் கோயிலின் முதல் வெள்ளிக்கிழமையன்று திவ்ய ஜோதி தரிசனமும், இரண்டு மற்றும் மூன்றாவது வெள்ளிக்கிழமையன்று சிறப்பு அலங்காரமும், நான்காவது வெள்ளிக்கிழமையன்று வளையல் அலங்காரமும், ஐந்தாவது மற்றும் கடைசி வெள்ளிக்கிழமையான 1008 புடவை அலங்காரமும் இந்த கோயிலின் ஆடி மாத சிறப்பு அம்சமாகும். ஆடி மாதம் கடைசி வெள்ளி என்பதால், அம்மனுக்கு அதிகாலையில் அபிஷேகங்கள் மற்றும் பல



வகையான பூஜைகள் நடைபெற்றன. கிருஷ்ணகிரி பகுதி மக்கள் மட்டுமின்றி, அருகில் உள்ள கிராமத்தில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் அலங்கரிக்கப்பட்டிருந்த, இந்த 1008 புடவை அலங்காரத்தை காண ஸ்ரீபெரிய மாரியம்மன் கோவிலில் குவிந்தனர். பக்தர்கள் அனைவரும் நீண்ட வரிசையில் காத்திருந்து அம்மனை வழிபட்டு 1008 புடவை அலங்காரத்தை பிரமிப்புடன் பார்த்துச் சென்றனர். பெண்கள்பலர் தங்களது நேர்த்திக்கடனை செலுத்த கோவிலுக்கும் வரும் பக்தர்களுக்கு சக்கரை பொங்கல், புளியோதரை, கூழ் உள்ளிட்டவைகளை வழங்கினார்கள். கடைசி வெள்ளிக்கிழமையான இன்று ஸ்ரீபெரியமாரியம்மனை வழிபடுவதால் சகல சௌபாக்கியங்கள், மாங்கல்ய பாக்கியம் உண்டாகி, குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும் என்பது நம்பிக்கை. மிகப்பிரமாண்டமாக 1008 புடவையால் கோவில் முழுவதும் அலங்கரிக்கப்பட்டதை பார்த்த பொது மக்கள் அனைவரும், இதை ஏற்பாடு செய்திருந்த ஆலய அறங்காவலர் முத்துக்குமார் மற்றும் ஆலய விழா குழுவினரை பாராட்டி சென்றனர். 1008 பக்தர்கள் அலங்காரத்திற்காக கொடுத்த இந்த புடவையை, மீண்டும் அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும் என ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# ஓ2 ( O2) ஹெல்த் ஸ்டுடியோவின் 25வது ஆண்டு விழா

சென்னை, ஆகஸ்ட் 15

ஓ2 ஹெல்த் ஸ்டூடியோ 25வது ஆண்டு விழா சென்னையில் நடைபெற்றது.

சவேரா குழுமத்தின் நிர்வாக இயக்குநரும், ஓ2 ஹெல்த் ஸ்டூடியோ நிறுவனருமான நீனாரெட்டி குத்துவிளக்கைஏற்றிவிழாவை தொடங்கி வைத்தார். இவ்விழாவில் வாடிக்கையாளர்கள் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஓ2 வாடிக்கையாளர்கள், ஓ2 பணியாளர்கள் மற்றும் சவேரா நீச்சல் குளத்தில் நீச்சல்பயிலும்குழந்தைகளின் நடன நிகழ்ச்சிகளும் மேலும் ஆண், பெண் இரு பாலாருக்குமானஃபேஷன் ஷோவும் அதில் வெற்றி பெற்றவர்களுக்கு முடி சூட்டுவிழா நடைபெற்றது கடந்த 25 ஆண்டுகளாக, ஓ2 ஹெல்த் ஸ்டுடியோ சென்னையின் முன்னோடி மற்றும் நீண்ட காலமாக செயல்பட்டு வரும்உடற்பயிற்சிமையங்களில் ஒன்றாக திகழ்கிறது. மாறிவரும் உடற்பயிற்சி போக்குகள் மற்றும் தலைமுறைகள் மத்தியிலும் தன் பாரம்பரியத்தைத் தக்க வைத்து வந்துள்ளது. இந்த ஆண்டுகளில், பல பிரபல திரையுலக பிரமுகர்களும் தங்கள் உடற்பயிற்சி பயணத்தை இங்கு தொடங்கி வளர்த்துள்ளனர், மேலும் "ஓ2 " அவர்களுக்கு விருப்பமான உடற்பயிற்சி மையமாக இருந்து வருகிறது. உடற்பயிற்சி, நலம் மற்றும் பொழுதுபோக்கு உலகுடனான இந்த நீடித்த தொடர்பு, சென்னையின் உடற்பயிற்சி துறையில் ஓ2க்கு தனித்துவமான இடத்தை பெற்றுத் தந்துள்ளது.




இந்திய அரசு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் மை பாரத் கேந்திரா, தருமபுரி சார்பில், 15 நாள் தூய்மை பாரத இயக்கத்தின் (Swachhata Pakhwada) ஒரு பகுதியாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் தூய்மை பாரத விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் கண்ணன் தலைமை வகித்தார். தருமபுரி துணை காவல் கண்காணிப்பாளர் சிவராமன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மை பாரத் தருமபுரி மாவட்ட இளைஞர் அலுவலர் சிவசண்முகம் நிகழ்ச்சியின் நோக்கம் மற்றும் தூய்மை பாரத இயக்கத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்க உரையாற்றினார். முன்னதாக, தூய்மை பாரத விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது

# ஈரோடு அதிமுக 15வது வட்ட கழக செயலாளராக காவேரி முருகன் நியமனம்

ஈரோடு ஆகஸ்ட் 15

ஈரோடு மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட அதிமுக 15வது வட்ட கழக செயலாளராக காவேரி முருகன் நியமிக்கப்பட்டுள்ளார். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமை கழகத்தின் வாயிலாக அறிவித்த இந்த நியமனத்தை தொடர்ந்து, புதிய பொறுப்பேற்றுள்ள காவேரி முருகன் கட்சி தலைவர்கள் மற்றும் மூத்த நிர்வாகிகளை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

தன்னை 15வது வட்ட கழக செயலாளராக நியமித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமிக்கும், தனது பெயரினை பரிந்துரை செய்து ஆதரவளித்த ஈரோடு மாநகர் மாவட்ட கழக செயலாளர் பெரியார்நகர் இரா. மனோகரனுக்கும் காவேரி முருகன் நேரில் சென்று தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, அதிமுகமாநிலகொள்கை பரப்புதுணைச்செயலாளரும், ஈரோடு மாநகராட்சி முன்னாள்துணை மேயருமான கே.சி.பழனிச்சாமி மற்றும் ஈரோடு கே.எஸ். தென்னரசு ஆகியோர்களை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து



சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். அப்போது கட்சி நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர். கழகத்தின் வளர்ச்சிக்கும், மக்கள் பணிகளுக்கும் தொடர்ந்து தீவிரமாக ஆற்றலாற்றுவதாக காவேரி முருகன் உறுதி எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

# கடந்த 10 ஆண்டுகளாக முறையான சாலை வசதி இல்லாமல் தவிக்கும் 10க்கும் மேற்பட்ட கிராமங்கள்



விளாத்திகுளம் ஆகஸ்ட்15.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள கமலாபுரம், கந்தசாமிபுரம், கூத்தலூரணி, வள்ளிநாயகபுரம், பட்டியூர்,சுப்பையாபுரம், வீரபாண்டியபுரம், முள்ளூர், சந்திரகிரி குறுக்குச்சாலை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் சாலை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்ட இந்த சாலை தற்போது மிகவும் மோசமாக இருசக்கரவாகனம், ஆட்டோ,108 வாகனம்,பள்ளி கல்லூரி வாகனங்கள், பேருந்து உள்ளிட்ட வாகனங்கள் உரிய நேரத்தில் செல்ல முடியாமல் அப்பகுதி மக்கள் தவித்து வருகின்றனர்.

குறிப்பாக ஒரு அவசர மருத்துவதேவை, பிரசவத்திற்கு கூட உரிய நேரத்தில் செல்ல முடியாமல் கிராம மக்கள் தவித்து வருகின்றனர், ஒரு அவசரகால மருத்துவத்தேவைக்கு 108 வாகனம், ஆட்டோவை கூப்பிட்டால் கூட இந்த மோசமான சாலையில் வர வாகனங்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். இந்தசாலையை சரி செய்யக்கோரி கடந்த ஐந்தாண்டுகளாக கமலாபுரம், கந்தசாமிபுரம், கூத்தலூராணி உள்ளிட்ட கிராம மக்கள் முதலமைச்சர் தனிப்பிரிவு, மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர், நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட அரசு அதிகாரிகளுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் இதுவரை மனு அளித்து எந்த பிரயோஜனமும் இல்லை என்றும், இங்கு யார் ஆட்சிக்கு வந்தாலும் எங்களின் பிரச்சனை அதே நிலை தான் நீடித்து வருகிறது என்றும், விரைவில் சாலையை சரி செய்யாவிட்டால் கிராம மக்கள் ஒன்று சேர்ந்து மிகப்பெரிய சாலை மறியல் போராட்டத்தை நடத்துவோம் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



கைத்தறி கைத்திறன் துணி நூல் மற்றும் கதர் துறை அரசு முதன்மைச் செயலர்,ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டி.என் வெங்கடேஷ் நேற்று சத்தியமங்கலம், வேடர் நகர், ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தினை ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி உட்பட பலர் உள்ளனர்

# எம்.சி.சி மேல்நிலைப்பள்ளி 191வது ஆண்டு விழா விஐடி துணைத்தலைவர் சேகர்விஸ்வநாதன் பங்கேற்பு



சென்னை, ஆக.15,

சென்னை கிறித்துவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியின் 191வது ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் விஐடி பல்கலைகழகத்தின் துணைத்தலைவர் சேகர் விஸ்வநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

பள்ளியின் தலைமை ஆசிரியரும் தாளாளருமான ஜி. ஜெபதாஸ்தினகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பள்ளியின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சிறப்புரையாற்றிய சேகர் விஸ்வநாதன், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டியதுடன், அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியுடன் செயல்பட்டு சிறந்து விளங்குமாறு மாணவர்களை ஊக்குவித்தார்.

மேலும் சிறப்பாக செயல்பட்டு தேர்வுகளில் நூறு சதவீத தேர்ச்சி பெறச் செய்த ஆசிரியர்களையும் பாராட்டி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கிய அவர், +2 மற்றும் எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வில் நூறு சதவீத தேர்ச்சி பெறச் செய்த ஆசிரியர்களை பாராட்டி கௌரவித்தார். மேலும், விடுப்பு எதுவும் எடுக்காமல் சிறப்பான வருகைப் பதிவை பேணிய ஆசிரியர்களுக்கு அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடமை உணர்வைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்

# காரிமங்கலத்தில் " We The Leaders "அமைப்பு சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி




தருமபுரி ஆகஸ்ட் 15 தருமபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் " We The Leaders" அண்ணாமலை குரூப் சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தியும், பொதுமக்களிடையே மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. "மரம் வளர்ப்போம்... சுற்றுச்சூழலைக் காப்போம் " என்ற முழக்கத்துடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு K.V. சின்னதுரை தலைமை வகித்தார். காரிமங்கலம் மேம்பாலம் பகுதியில் தொடங்கிய விழிப்புணர்வு பேரணி, பாலக்கோடு சாலையில் உள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயில் அருகே நிறைவு பெற்றது. பேரணியில் சுற்றுச்சூழலை பாதுகாப்பது, மரங்களின் அவசியம், எதிர்கால தலைமுறைக்காக பசுமையான சூழலை உருவாக்குவது உள்ளிட்ட கருத்துகளை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற 2,000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக C. நரசிம்மன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு பேரணியை துவக்கி வைத்தும், மரக்கன்றுகளை நட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து பல்வேறு இடங்களில் மரக்கன்றுகளை நட்டனர். அதிக அளவில் மரக்கன்றுகளை நடுவதன் மூலம் காரிமங்கலம் பகுதியை பசுமையான பகுதியாக மாற்றவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிக்கவும் இந்த நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது. நிகழ்ச்சியில் " We The Leaders " அமைப்பைச் சேர்ந்த கலைச்செல்வன், முருகன், தினேஷ், மூர்த்தி, மணி, ராகுல், சதீஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் காரிமங்கலம் அண்ணாமலை குரூப் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# புதுக்கடை அருகே பிளஸ் 2 மாணவி பலாத்காரம்; வாலிபர் கைது

நாகர்கோவில், ஆக.15 புதுக்கடை அருகே உள்ள ராமன் துறை பகுதியை சேர்ந்தவர் ஆரோக்கிய திக்ஷன் (27). மீன்பிடி தொழிலாளி. அதே பகுதியை சேர்ந்த பிளஸ் 2 படிக்கும் மாணவியை தன்னுடன் பேசுமாறு மிரட்டி வந்துள்ளார். பின்னர் தன் செல் போன் நம்பரை கொடுத்து தனுடன் பேச வேண்டும் என்று மிரட்டி உள்ளார். இதனால் பயந்து போன மாணவி செல்போன் நம்பரை வாங்கி பேசி வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 2024 ஆம் ஆண்டு ஆரோக்கிய திக்ஷன் மாணவிக்கு வீடியோ கால் செய்து மாணவியிடம் திருமண ஆசை காட்டி, ஆடைகளை கழற்ற வைத்து நிர்வாணமாக நிற்க வைத்து அதனை தனது செல்போனில் படம் பிடித்து வைத்துள்ளார். தொடர்ந்து சில நாட்கள் காதல் வார்த்தைகள் பேசி வந்துள்ளனர்.

இதை தொடர்ந்து ஆரோக்கிய திக்ஷன் தனக்கு கடன் இருப்பதாகவும் அதனை அடைக்க மாணவியின் தங்க மோதிரத்தை கேட்டுள்ளார். மாணவி மோதிரம் தருவதாக கூறி, அன்று இரவு மோதிரத்தை வாங்குவதற்காக ஆரோக்கிய திக்ஷன் மாணவியின் வீட்டிற்கு சென்றுள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஆரோக்கிய திக் ஷன் மாணவியை பாலியல் தாக்குதல் நடத்தி, வலுக்கட்டாயமாக பலாத்காரம் செய்துள்ளார். பின்னர் தொடர்ந்து இந்த பாலியல் தாக்குதல்கள் நடைபெற்று வந்துள்ளது. பின்னர்சில காலம் சென்றதும் அந்த வாலிபர் வேறு ஒரு பெண்ணுடன்பேசி பழகி வருவது பிளஸ் 2 மாணவிக்கு தெரியவந்துள்ளது. இதனால் மாணவி வாலிபருடன் பேசுவதை தவிர்த்து வந்தார்.

மாணவி தனுடன் பேசாததால் ஆத்திரமடைந்த ஆரோக்கிய திக் ஷன் மாணவியுடன் வீடியோ காலில் பேசியது, மாணவியை நிர்வாணமாக எடுத்த போட்டோபோன்றவற்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். இந்த போட்டோவை பார்த்த மாணவியின் பெற்றோர் இது குறித்து கேட்டபோது வாலிபரின் வக்கிர புத்தி செயல் வெளிச்சத்திற்கு வந்தது.

இதை எடுத்து மாணவியின் சார்பில் குளச்சல் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் விசாரண நடத்தி ஆரோக்கி திக்ஷன் மீது போக்சோ, தகவல் தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்த உள்ளிட்ட 7 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்தனர். பின்னர் பதுங்கி இருந்த ஆரோக்கிய திக்ஷனை மகளிர் போலீசார் கைது செய்து நாகர்கோவிலில் உள்ள மகிளா கோட்டில் ஆஜர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டியில் மீண்டும் துறைமுகம் அமைக்க கோரிக்கை



ராமநாதபுரம், ஆக.15 வரலாற்று நகரமான தொண்டிக்கு மீண்டும் வருமா துறைமுகம் ? தொண்டி மற்றும் சுற்றுவட்டார கிராமப்புற மக்கள்வாழ்க்கைதரம் உயர தொண்டியில் துறைமுகம் அமைக்க வேண்டும் தமுமுக மாநில செயலாளர் தொண்டி சாதிக் பாட்ஷா கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில் ; ராமநாதபுரம் மாவட்டத்தில் தொண்டி ஒரு வரலாற்று சிறப்புமிக்க ஊராகும் சேர சோழ பாண்டியர்கள் காலத்தில் இப்பகுதியில் துறைமுகம் இருந்ததாக வரலாறு கூறுகின்றன. இப்பகுதியில் மீன்பிடி தொழில் பிரதானமான தொழிலாகும் மீன்கள் டன் கணக்கில் இங்கிருந்து ஏற்றுமதி நடக்கின்றன. பண்டைய காலத்தில் முத்து, ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் இலங்கையில் இருந்து தேங்காய் எண்ணெய் அரபு நாடுகளில் இருந்து குதிரைகள் பர்மா போன்ற நாடுகள் இருந்து தேக்குகள் இறக்குமதி செய்யப்பட்டு பல்வேறு நகரங்களுக்கு சென்றதாக வரலாறு கூறுகின்றது. துறைமுகமாக இருந்த போது செல்வ செழிப்போடு இருந்த பகுதியாகும். தற்போது வறட்சியின் பிடியில் இருக்கின்றன. இயற்கையை நம்பி விவசாய குடிமக்களும் கடல் தாயை நம்பி மீனவ மக்களும் வாழ்கின்ற ஒரு சிறப்பான ஊராகும். இப்பகுதியில் தொழிற்சாலைகளோ பெரிய நிறுவனங்களோ இல்லை இதனால் வேலை வாய்ப்புகள் இல்லாமல் படித்த இளையோர்கள் பல்வேறு நாடுகளுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் வெளி மாநிலங்களுக்கும் வேலை தேடி செல்லக்கூடிய மிகப்பெரும் அவல நிலை இருக்கிறது. எனவே தொண்டி பகுதியில் கடல் சார்ந்த வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் விதமாக துறைமுகம் அமைக்க வேண்டும் என நீண்ட நாட்களாக கோரிக்கை வைக்கப்படுகிறது. இத்திரைப்படம் செயல்படுத்த வேண்டும் என்று தொண்டி முஸ்லிம் கல்வி சங்கத்தின் சார்பில் தொண்டி அருகே முறிச்சிலான் தோப்பில் சுமார் 25 ஏக்கர் அரசுக்கு தானமாக வழங்கப்பட்டது . இடம் தானமாக வழங்கிய நாள் முதல் இன்று வரை துறைமுகம் அமைக்கும் திட்டம் குறித்து எந்த ஒரு முயற்சியும் நடவடிக்கையும் எடுக்காத அவல நிலை தொடர்கிறது. தொண்டி சுற்றுவட்டார மக்களின் வாழ்வை மேம்படுத்த துறைமுகம் அமைத்தால் சிறப்பானதாக இருக்கும். துறைமுகம் அமைவதால் ராமநாதபுரம் மாவட்டம் மட்டும் அல்லாது சிவகங்கை புதுக்கோட்டை மற்றும் பல்வேறு மாவட்டங்கள்இதன்மூலம்நிச்சயமாக பயன்பெறும் பலன் அடையும். வேலை வாய்ப்புகளை பெருக்கும் வகையிலும் மீனவ மக்களும் விவசாய பெருங்குடி மக்களும் அனைத்து மக்களும் பயன்பெறக்கூடிய துறைமுகத்தை அமைப்பதன் மூலமாக நிச்சயமாக அரசுக்கும் இதன்மூலம் மக்களும் பயன் கிடைக்கும் தொண்டி சுற்றுவட்டார மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மத்திய மாநில அரசுகள் உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மாநில செயலாளர் தொண்டி சாதிக் பாட்ஷா கோரிக்கை விடுத்துள்ளார்.

# தஞ்சாவூர் பெரிய கோவில் அருகே ரூபாய் 5.50 இலட்சம் சீரமைக்கப் பட்ட பத்தாயிரம் பூங்கா



தஞ்சாவூர் ஆகஸ்ட் 15 தஞ்சாவூர்பெரியகோவில் அருகே ரூபாய் 5.50 இலட்சம் சீரமைக்கப்பட்ட பத்தாயிரம் பூங்கா பயன் பாட்டுக்கு திறக்கப்பட்டது

தஞ்சாவூர் பெரிய கோவில் அருகே கல்லணை கால்வாய் கரையில் 2000 வது ஆண்டில் பத்தாயிரம் பூங்கா ( மில்லேனியம் பாரக்)திறக்கப்பட்டது

பராமரிப்பின்றி கிடந்த இந்த பூங்காவில் தஞ்சாவூர் கிங்ஸ் ரோட்டரி சங்கத்தினர் ரூபாய் 5.50 இலட்சத்தில் சீரமைத்து ரோட்டரி சங்க கடிகார கோபுரம்,நம்ம தஞ்சை செல்ஃபி பாயிண்ட் போன்றவை அமைந்தனர்

இந்நிலையில் இந்த பூங்காவை தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரியும், ரோட்டரி சங்க கடிகார கோபுரத்தை ரோட்டரி மாவட்ட ஆளுநர் வைத்தியநாதனும்நம்ம தஞ்சை செல்பி பாயிண்ட்டை மேயர் (பொறுப்பு) டாக்டர் அஞ்சுகம் பூபதியும் திறந்து வைத்தனர்

பின்னர் 50 பேருக்கு தலைக்கவசங்கள்வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது

நிகழ்ச்சிகளில்தஞ்சாவூர் கிங்ஸ் லோட்டஸ் சங்க சாசன தலைவர் ஆசிப் அலி ரோட்டரி உதவி ஆளுநர் திருவம்பலம், ரோட்டரி திட்டத் தலைவர் கண்ணன், இயக்குனர் யாகப்பன், கிங்ஸ் ரோட்டரி சேர்ந்த தலைவர் தாரிசியஸ் குழந்தைசாமி பொருளாளர் ஜாகிர் உசேன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திருச்சியில் வாலிபரிடம் செல்போன் பறிப்பு

திருச்சி பொன்மலைப்பட்டி திரு.வி.கா. தெருவை சேர்ந்தவர் சுப்பிரமணி (வயது 18). இவர் 12ம் வகுப்பு முடித்துவிட்டு கல்லூரி சேர்வதற்காக வீட்டில் இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் கடந்த 12ஆம் தேதி இவர் பொன்மலை பொன்னேரி பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டு இருந்தார். அப்போது அங்கு வந்த 3 பேர் சுப்பிரமணியை வழிமறித்து அவரிடம் இருந்து செல்போனை பறித்து சென்றனர். இதுகுறித்து சுப்பிரமணி பொன்மலை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து பொன்மலைப்பட்டி முல்லை நகரை சேர்ந்த லிபின் (வயது 23) என்பவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் இது தொடர்பாக துவாரகன், நான்சி ஆகியோரரை தேடி வருகின்றனர்.




சேலத்தில் ஆகஸ்ட் 14 வெள்ளிக்கிழமை அன்று சேலம் மாவட்ட அதிமுக சார்பில் எடப்பாடி பழனிச்சாமி ஆணைகிணங்க சேலம் புறநகர் மாவட்ட கழக செயலாளர் இளங்கோவன் தலைமையில் தமிழக விவசாயிகள் வங்கிகளில் பெற்ற பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாமல் ஏமாற்றியதை கண்டித்தும், மேகதாது அணைகட்டும் பிரச்சினையில் மெத்தனமாக செயல்படுவதை கண்டித்தும் மற்றும் கர்நாடகத்திடம் இருந்து தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய உரிய காவிரி நீரை பெறுவதற்கு முயற்சி எடுக்காத தமிழக அரசை கண்டித்து சேலம் மாவட்ட அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் தங்கமணி கலந்து கொண்டு கண்டன பேருரை ஆற்றினார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முன்னொடிகள் பங்கேற்றனர்.

# வேலூரில் அதிமுக சார்பில் தவெக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்




வேலூர் ஆக:15 வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் அண்ணா சாலை, அண்ணா கலையரங்கம் அருகே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அஇஅதிமுக) சார்பில் தமிழக வெற்றி கழகம் ஆட்சியின் அவல நிலையை கண்டித்தும், தமிழகத்தில் மக்களுக்கான ஆட்சி நடத்த வேண்டும் என வலியுறுத்தியும், முன்னாள் முதல்வரும் அஇஅதிமுக பொதுச்செயலாளருமான நாட்டிலே யாரும் பெறாத வகையில் ஒன்றரை லட்சம் வாக்குகள் பெற்ற மக்கள் செல்வந்தர் எடப்பாடி கே. பழனிசாமி ஆலோசனைக்கிணங்க மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அதிமுக கொள்கை பரப்பு செயலாளரும் முன்னாள் மத்திய அமைச்சரும் மாநிலங்களவை உறுப்பினருமான டாக்டர் மு. தம்பிதுரை தலைமை தாங்கி கண்டனப் பேருரையாற்றினார். மாநில அமைப்பு செயலாளர் வி. ராமு, வேலூர் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு, அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினரும் புறநகர் மாவட்ட செயலாளருமான த. வேலழகன் ஆகியோர் முன்னிலை வகித்து கண்டன உரையாற்றினர். அதிமுக ஆட்சியில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு திட்டங்கள் எளிய முறையில் சென்றடைந்ததை எடுத்துரைத்த அவர்கள், தற்போது உள்ள ஆட்சியில் நிலவும் அவல நிலைகள், விவசாயிகள் வங்கிகளில் பெற்ற பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாமல் வஞ்சித்து வருவது, மேகதாது பிரச்சினையில் மெத்தனம் காட்டுவது, காவேரியில் தமிழகத்திற்கு உரிய பங்கு நீரை பெற நடவடிக்கை எடுக்காதது ஆகியவற்றை கண்டித்து, தமிழக வெற்றி கழகம் பொய்க்கால் குதிரை அரசு என குற்றம் சாட்டினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிமுக மாநகர மேற்கு பகுதி செயலாளர் வி.பி.எம். குமார், அணைக்கட்டு ஒன்றிய செயலாளர் பாபுஜி, அணைக்கட்டு பொறுப்பாளர் பிச்சாண்டி, அணைக்கட்டு கங்கநல்லூர் மகாலிங்கம், மாமன்ற வார்டு உறுப்பினர்கள் கே.பி. ரமேஷ், எழிலரசன், நிர்வாகிகள் எம்.ஏ.ராஜா, மோகன், பிச்சைமுத்து, டீக்காராமன், கே. ஜெயக்குமார், குப்புசாமி, அளவை குப்புசாமி, டி.டி.ரகு, சி.கே.நித்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், 500க்கும் மேற்பட்ட அதிமுகவினர் பதாகைகள், பேனர்கள் மற்றும் அதிமுக கொடிகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை குறித்து அவதூறு செய்தி: ஜோஸ் சார்லஸ் மார்ட்டினுக்கு தேவர் சமுதாய கூட்டமைப்பு எச்சரிக்கை




மதுரை ஆகஸ்ட்:15 தென் தமிழகத்தில் தேவர் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாக பாடுபட்டு தென் மாவட்ட மக்களுக்கு உயர்தரமான மருத்துவ சேவையை குறைந்த செலவில் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு மதுரையில் 1000 படுக்கை வசதிகளுடன் கூடிய மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்என்றநிறுவனத்தை டாக்டர்N சேதுராமன் அவர்களால் தொடங்கப்பட்டு அவரது மகன் டாக்டர் S. குருசங்கர் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு கடந்த 36 ஆண்டுகளாக தமிழகத்திலே மிகச்சிறந்த மருத்துவமனை என்று மத்திய மாநில அரசுகளால் சிறப்பான மருத்துவ சேவைக்கான பல விருதுகளை பெற்று இன்றுவரை தினமும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் பயன்பெறும் வகையில் இம்மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது இம்மருத்துவமனைக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கத்தோடு இம்மருத்துவமனையை பற்றி எதுவுமே தெரியாத, மக்களால் தமிழகத்தை விட்டு விரட்டப்பட்டு பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுந்து இந்தியாவில் பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தை சீரழித்துக் கொண்டிருக்கும் லாட்டரி சீட்டு அதிபர் சாண்டியாகோ மார்ட்டினின் மகன் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் என்பவர் எங்கள் சமுதாயத் தலைவரின் அயராத உழைப்பினால் உருவாக்கப்பட்டு இன்றுவரைதென்மாவட்ட மக்களால் சிறந்த மருத்துவமனை என்று போற்றப்படும் இம்மருத்துவமனையையும் மருத்துவமனை நிர்வாகத்தையும் களங்கம் விளைவிக்கும் வகையில் லாட்டரி மாஃபியாவினால் நடத்தப்படும் SS NEWS DIGITAL என்ற செய்தி சேனலில் மூலம் உண்மைக்குப்புறம்பான செய்திகளை வெளியிட்டுக்கொண்டிருக்கும் லாட்டரி சீட்டு அதிபர் சாண்டியாகோ மோர்ட்டினின் மகன் ஜோஸ் சார்லஸ் மார்ட்டினை சமுதாயத்தின் சார்பாக எச்சரிக்கிறோம்.

மருத்துவமனையையும் மருத்துவமனை நிர்வாகத்தையும் களங்கம் விளைவிக்கும் வகையில் உண்மைக்குப்புறம்பான செய்திகளை பரப்பி மக்களிடம்தவறாகஎண்ணத்தை ஏற்படுத்திய செய்தியை லாட்டரி மாஃபியாவினால் நடத்தப்படும் SS NEWS DIGITAL என்ற செய்தி சேனலில் இருந்து முற்றிலும் இம்மருத்துவமனை பற்றிய அனைத்து தவறான செய்திகளையும் நீக்கவேண்டும். மற்றும், இந்த தவறான செய்தியை வெளியிட்டதற்கு பகிரங்க மன்னிப்பை SS NEWS DIGITAL சேனலின் வாயிலாக தெரிவிக்க வேண்டும். மன்னிப்பு கோராத பட்சத்தில் தங்களுக்கு சொந்தமான நிறுவனங்களின்முன்புஅனைத்து மாவட்டங்களிலும் எங்களின் சமுதாய மக்களின் சார்பாக சட்டரீதியான முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்கள் உண்மைக்குப்புறம்பான தவறான செய்தியை தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தமிழக அரசின் பெயரையும் களங்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அணுகியுள்ளார். மேலும் , உண்மைக்குப்புறம்பான தவறான செய்தியை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்ற ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் மீது தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமுதாயத் தலைவர்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

# தஞ்சாவூரில் எய்ட்ஸ் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி; மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்தார்



தஞ்சாவூர் ஆகஸ்ட் 15 தஞ்சாவூரில் எய்ட்ஸ் விழிப்புணர்வுகலைநிகழ்ச்சியை மாவட்ட கலெக்டர் ரேவதி தொடங்கி வைத்தார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அழகு சார்பில் எச்ஐவி, எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று குறித்து விழிப்புணர்வு பிரச்சார நாட்டுப்புற கலை நிகழ்ச்சி நடைபெற்றது

இதனை தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி தொடங்கி வைத்து, விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை ஆட்டோகளில் ஒட்டினார். பின்னர் கலெக்டர் ரேவதி கூறுகையில்;தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலகம் மூலம் எச் ஐ வி, எய்ட்ஸ் பால்வினை நோய் தொற்று குறித்த விழிப்புணர்வு முகாம் விழிப்புணர்வு நாட்டுப்புற கலை நிகழ்ச்சி, பரிசோதனைக்கான கியூ ஆர் குறியீடு விளம்பரப்படுத்துதல் மற்றும் ஆட்டோக்களில் ஸ்டிக்கர் ஒட்டுதல் போன்றவற்றின் வாயிலா க தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது

இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் அக்டோபர் 12ஆம் தேதி வரை 60 நாட்கள் நடைபெறும் பள்ளி மாணவர்களுக்கு வாழ்வியல் கல்வி பயிற்சி, கல்லூரி மாணவர் களுக்கு விழிப்புணர்வு பயிற்சி, பொதுமக்களுக்கு நாட்டுப்புற கலை நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும் என்றார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் கலைவாணி ,மண்டல திட்ட மேலாளர் ஜெனிபர் அருள் மேரி மற்றும் மாவட்ட எய்ட்ஸ்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலக பணியாளர்கள், நம்பிக்கை மையம், சுகவாழ்வு மையம், ரத்த மையம் ,கூட்டு சிகிச்சை மையம் மற்றும்அரசுசாராதொண்டு நிறுவனர் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் அடுத்துள்ள சாஸ்திரா நிகர் நிலை பல்கலைக்கழகத்திற்கு துணை ஜனாதிபதி வருகை யொட்டி டிரோன்கள் பறக்க தடை

## கலெக்டர் ரேவதி உத்தரவு

தஞ்சாவூர் ஆகஸ்ட் 15 தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி எடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது இந்திய துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் வருகின்ற 17ஆம் தேதி திங்கட்கிழமை தஞ்சாவூர் அடுத்துள்ள சாஸ்திர நிகர்நிலைப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தருவது முன்னிட்டு மாணபடைத்தளம் முதல் சாஸ்திரமிக நிலைப்பல்கள் கழகம் புதுக்குடி மற்றும் அதை சுற்றி வட்டாரப் பகுதிகளில் பாதுகாப்பு காரணம் கருதி 17ஆம் தேதி அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை டிரோன்கள்பறக்க தடை விதிக்கப் படுகிறது

எனவே 17ஆம் தேதி அன்று காலை 6 மணி முதல் மாலை6 மணி வரை டிரோன்கள் மற்றும் ஆளில் லா வான்வழி இது வாகனங்கள் பறக்க விடும் நபர்கள் மீது உரிய விதிமுறைகளில் படி கடும் நடவடிக் கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.